கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.234/2021

வா.சா.– 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **திருமதி.கார்த்தி** | தொழில் | |
| த/க பெயர் | **பாலசுப்பிரமணியன்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | .2026 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எனது கணவருடன் இன்று இந்நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா வழக்கு தாக்கல் செய்தது நான் தான். வழக்கின் பிரதிவாதி என்னுடன் உடன் பிறந்த மூத்த சகோதரி ஆவார். என்னுடன் பிறந்தவர்கள் என்றுடன் சேர்த்து 4 பெண்கள், 1 ஆண் ஆவார். எனது சகோதரிகள் ராமதிலகம், லெட்சுமி திலகம், மீனாட்சி, கார்த்தி மற்றும் எனது அண்ணன் ஸ்ரீதர் ஆவார். எனது தாய் மற்றும் தந்தை வழக்கிற்கு முன்பாக 2017 ல் இறந்து விட்டார்கள். வா.சா.ஆ.4 ஆவணம் 25.06.2015 க்கு பிறகு 2017 வாக்கில் எனது தந்தை இறந்துவிட்டார். அதன் பிறகு ஒரு மாதத்திலேயே எனது தாயார் இறந்து விட்டார். எனது அண்ணன் தாய் தந்தை ஆகியோர்கள் குடியிருந்த பிராதில் கண்ட விலாசத்திலேயே நாங்களும் குடியிருந்தோம் என்றால் சரிதான். எனது தக்கப்பனார் தனித்தனியாக ஒரே விலாசத்தில் வீடுகள் கட்டி கொடுத்திருந்தார். எனது கணவர் சவுதி அரோபியாவில் 35 வருடங்களாக வேலை பார்த்து வந்தார். தற்போது ஒரு வருடமாக இந்தியாவில் உள்ளார். எனக்கும் பிரதிவாதியான எனது சகோதரிக்கும் எனது கணவர் தாய்மாமன் உறவு என்றால் சரிதான். எனது தாயாரின் மூத்த அண்ணனின் மகன் தான் பிரதிவாதியான எனது சகோதரியின் கணவர் (தாய்மாமன் முறை) ஆவார். பிரதிவாதியின் கணவர் VAO வாக வேலை பார்த்த போதே இறந்துவிட்டார். நான் வீட்டுக் குடித்தனம் செய்கிறேன். என் சகோதரி ராமதிலகம் அவரது கணவரின் பென்சன் போன்றவற்றை பெற்று வருகிறார் என்றால் சரிதான், அது போக அவர் எல்ஐசி ஏஜண்ட்டாகவும் உள்ளார். தற்போது அவரது கணவர் கட்டி வைத்த வீடுகளின் வாடகை வருமானம் வருகிறதா என்றால் கடந்த 10 வருடங்களாக எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லாததால் என்னால்

சொல்ல முடியவில்லை. என் அக்காவின் கணவர் 10 வருடங்களுக்கு இறப்பதற்கு முன்பாக வாடகை பெற்று வந்தாரா என்றால் ஆமாம். என் அக்காவிற்கு 2 மகன்கள் இருக்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் திருமணமாகி குடும்பத்துடன் வசித்து வருகிறார்கள். வா.சா.ஆ.4. ஆவணமானது ஏற்படுத்தப்படுவதற்கு முன்பாகவே இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை, மூத்தமகன் கோபிநாத்துக்கு மட்டும் திருமணம் ஆகியிருந்தது. 2வது மகன் மதனகோபாலுக்கு சுமார் 2 வருடங்களுக்கு பின்பு திருமணம் நடந்தது. 2 திருமண நிகழ்ச்சிகளிலும் நான் கலந்து கொண்டேன். எனக்கு 2 மகன்கள் உள்ளார்கள், மூத்தவன் பெயர் நாகராஜ் என்ற விக்கி, இன்னொரு பையன் பெயர் முரளிதரன் ஆவார். நாகராஜ் என்ற விக்கிக்கு 05.06.2022ல் திருப்பரங்குன்றத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது. தாவா வழக்கு தாக்கல் செய்த பின்புதான் திருமணம் நடந்ததா என்றால் சரிதான். என் மகன் திருமணத்திற்கு பிரதிவாதிகள் மற்றும் அவரது மகன்கள் கலந்து கொண்டார்களா என்றால் கலந்து கொண்டார்கள், அப்போது பிரச்சனை எதுவும் இல்லை. 05.06.2022 வரையிலும் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல, நான் எனது சகோதரியிடம் பணத்தை கேட்டு வந்தேன். சாட்சி தாமாக கூறுகிறார். கல்யாணத்திற்கு பிறகு பிரதிவாதி கட்டப்பஞ்சாயத்து ஆட்களை அனுப்பி வைத்தார். 05.06.2022க்கு பிறகு பிரதிவாதி கட்டப் பஞ்சாயத்தில் ஈடுபட்ட பிறகுதான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் தாவாவில் அசல் பிராதில் பக்கம் 1 முதல் 4 பக்கங்களில் என் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். பிராதில் உள்ள 1 முதல் 4 பக்கங்களில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என் கணவருக்கு பிராதில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.04.21 21:41:51 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.